

# பாடம் 8

ஆகஸ்ட் 17-23

# 'மிகவும் சிறியவராகிய இவர்களில்'

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *மத் 5:2-16, 38-48; ரோமர் 12:20,21; லூக் 16:19-31; 12:13-21; மத் 25:31-46.*

**மனன வசனம்:** அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். மத்தேயு 25:40.

பிறர்மேல் அக்கறையுள்ளவராக இயேசு வாழ்ந்தார்; குறிப்பாக வேதனையுடனும், தொலைந்துபோன நிலையிலும் இருந்தவர்கள்மேல் அக்கறைகாட்டினார். அதனால்தான் பிறர்மேல் அக்கறைகாட்டுவது குறித்து அவர் ஏராளம் சொல்லியிருக்கிறார்.

தேவனைப் பின்பற்றுவதின் அர்த்தம் உணர்ந்து, நடைமுறை வாழ்க்கையில் வெளிப்படுத்த வேண்டியவற்றை இயேசு போதித்தார். தாம் இந்தப் பூமியில் வாழ்ந்தபோது செய்ததுபோல, நியாயமும் அன்பும் இரக்கமும் நிறைந்த கிரியைகளைச் செய்யுமாறு இயேசு வலியுறுத்துகிறார். அவருடைய முன்மாதிரியை நாம் பின்பற்றினால், அவரைப் போல மற்றவர்களுக்கு ஊழியம்செய்யலாம்.

பரலோகராஜ்யம்பற்றியும் இயேசு சொன்னார். இப்போதே அந்த ராஜ்யத்தில் நாம் பங்குபெறலாமென்றும் கூறினார். அதற்கு இந்தப் பூலோகராஜ்யங்களைப் போன்றல்லாமல், வித்தியாசமான முன்னுரிமைகளும் விழுமியங்களும் நல்லொழுக்கங்களும் உள்ள வாழ்க்கைமுறை அவசியம். இந்த ராஜ்யத்தின் அடிப்படையை இயேசுவின் போதனைகளில் காணலாம். தேவனைச் சேவித்து, மற்றவர்களைச் சரியாக நடத்துமாறு வலியுறுத்துகிறார். பிறர் தேவைகளைச் சந்தித்து, அவர்களைத் தூக்கிவிடுவது, தேவனை நேரடியாகச் சேவிப்பதற்கான வழிகளில் ஒன்றாகும்.

*2019, ஆகஸ்ட் 24 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

## மலைப்பிரசங்கத்தின் துவக்கம்

மலைப்பிரசங்கத்தை இயேசுவுடைய போதனைகளின் தொகுப்பு எனலாம். தேவனுடைய ராஜ்யத்திற்கேற்ற வாழ்க்கையை மூன்று அதிகாரங்களில் சொல்கிறார். அந்த வாழ்க்கைக்கான விழுமியங்களை முதலாவது சொல்ல ஆரம்பிக்கிறார். அவற்றைத்தான் பாக்கிய வசனங்கள் என்கிறோம்.

**கேள்வி: மத் 5:2-16ஐ வாசியுங்கள். ஒன்பது வகையான மக்கள் 'பாக்கியவான்கள்' என்று இயேசு குறிப்பிடுகிறார்; அவர்களில் பொதுவாகக் காணப்படுகிற பண்புகள் யாவை?**

---

இந்த வசனங்கள் ஆழமான ஆவிக்குரிய அர்த்தமுடையவை. நடைமுறைவாழ்க்கைக்கானவற்றையும் இந்த வசனங்கள் வலியுறுத்துகின்றன. நம்மிலும் நம் உலகத்திலும் காணப்படும் வறுமை நிலையை உணரும்படி இயேசு சொல்கிறார். நீதி (சில மொழிபெயர்ப்புகளில் நியாயம் என்று உள்ளது), தாழ்மை, இரக்கம், சமாதானம்பண்ணுதல், இருதயத்தில் சுத்தம் போன்ற குணங்களைக் குறிப்பிடுகிறார். இவற்றின்படி வாழ்ந்தால் நம் உலகம் எப்படிப்பட்டதாக இருக்கும்! அந்த வாழ்க்கையை இயேசு வலியுறுத்துகிறார். உலகத்திற்கு உப்பாக, வெளிச்சமாக இருக்கும்படி அவர் கூறுவதில் இது தெளிவாகிறது. மத் 5:13-16.

உப்பும் வெளிச்சமும் வாழ்க்கையில் மிகுந்த பயனுடையவை. உப்பு சுவை தருகிறது; சேர்க்கப்படும் உணவுகளைப் பாதுகாக்கிறது. அதுபோல நாமும் நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு நன்மையாக வாழவேண்டும். வெளிச்சம் இருளைப் போக்குகிறது, தடைகள் மற்றும் ஆபத்துகளைக் கண்டுகொள்ள உதவுகிறது. ஒரு வீடு அல்லது நகரத்திற்குப் பாதுகாப்பு தருகிறது, தூரத்திலுள்ள இலக்கை நோக்கிச் சரியாகச் செல்ல உதவுகிறது. இரவின் வெளிச்சம்போல இருக்கவேண்டும். 'மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது' என்று இயேசு சொன்னார். மத் 5:16.

சீடர்கள் தங்களைச் சுற்றிலும் இருப்போரின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தி, மேம்படுத்தவேண்டும்; அதைத்தான் உப்பும் வெளிச்சமும் சுட்டிக்காட்டுகின்றன. தகுந்த துயரமும், இருதயசுத்தமும், தாழ்மையும், இரக்கமும், சமாதானம்பண்ணுதலும், துன்பம்சகித்தலும் காணப்படும் வாழ்க்கையானது உப்புக்கும் வெளிச்சத்திற்கும் இணையான வாழ்க்கையாகும். எனவே 'குறைத்து மதிப்பிடப்படும்' தம்முடைய ராஜ்யத்தின் இந்த விழுமியங்களின்படி வாழுமாறு இயேசு தம் பிரசங்கத்தைத் துவங்குகிறார்.

---

உங்களுடைய பகுதியில் உங்களுடைய சபை எவ்வாறு உப்பாகவும் வெளிச்சமாகவும் விளங்க முடியும்? உங்களுடைய சபையின் ஊழியத்தால் உங்களுடைய சமுதாயம் எவ்வளவுக்குச் சிறந்ததாக மாறியிருக்கிறது? ஒருவேளை உங்கள் சபை அந்தப் பகுதியிலிருந்து அகற்றப்படவேண்டியிருந்தால், அது பெரிய பாதிப்பை அங்கு ஏற்படுத்துமா?

# தீமையை நன்மையால் வெல்லுதல்

இயேசு யாருக்குப் போதித்தார்? அவர்கள் என்ன சூழ்நிலையில் வாழ்ந்தார்கள்? இவை தெரிந்தால், இயேசுவுடைய போதனையின் முக்கியத்துவம் புரியும். இயேசு ஊழியம்செய்த பகுதிகளில் திரளான மக்கள் அவரைப் பின்பற்றினார்கள். மத் 4:25; 5:1. அவர்களில் அநேகர் சாமானியமக்கள்; ரோமசாம்ராஜ்ய ஆளுகையின்கீழ் வாழ்ந்தவர்கள். அவர்களில் ஒரு சிலர் யூத ஆட்சியாளர்கள் மற்றும் மதத்தலைவர்கள். சாமானியமக்களின் வாழ்க்கை மிகக்கடினமாக இருந்தது. அவர்களாக எதையும் தீர்மானிக்கமுடியாது, வரிச்சுமையும், மதப்பாரம்பரியச் சுமையும் அதிகமாக இருந்தன.

சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும், இந்த மக்கள் தைரியமாக, மரியாதையுடன் வாழ்வதை இயேசு விரும்பினார்; அதற்கேற்றார் போலப் பிரசங்கித்தார். மத் 5:38-48இல் அதற்கான ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம். ‘மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு,’ ‘உன் அங்கியையும் விட்டுவிடு,’ ‘இரண்டு மைல் தூரம் போ’ போன்ற சொற்றொடர்கள் பேசிப்பேசிப் புளித்துப்போனவை. அவ்வளவுக்கு இவை பிரபலமான சொற்றொடர்கள் என்பதால், எத்தகைய மனநிலைகளை இயேசு எதிர்பார்க்கிறாரென்பது இந்தப் போதனையில் வெளிப்படுகிறது.

இந்தக் காட்சிகளை மக்கள் அன்றாடம் பார்த்துவந்தார்கள். அவர்களுடைய ‘மேலதிகாரிகள்’ அல்லது எஜமான்கள் அவர்களைக் கொடுமையாக நடத்தினார்கள். கடன்பட்டு, தங்கள் சொத்துகளை நிலஉரிமையாளர்களிடம், கடன்கொடுத்தவர்களிடம் இழந்தார்கள். ரோமப் போர்வீரர்கள் அவர்களைக் கட்டாயமாக வேலைவாங்கினார்கள். எனவே, மக்கள் ஒழுக்கத்துடன் நடந்து, தங்களை ஒடுக்குகிறவர்களுக்கும் மரியாதைசெலுத்துமாறும், அதன்மூலம் மனிதநேயத்தைக் காத்துக்கொள்ளுமாறும் இயேசு போதித்தார். ஒடுக்கிறவர்களுக்கு அதிகாரம் இருக்கலாம், ஆனால் அதை எவ்வாறு எதிர்கொள்ளவேண்டுமென்பதை மக்கள்தாம் தீர்மானிக்கவேண்டும். வன்முறையை மறுத்து, பெருந்தன்மையோடு நடந்துகொண்டால் அநியாயத்தையும் ஒடுக்குதலையும் தோலுரித்துக்காட்டலாம்.

**கேள்வி: இந்த நியதிகளின்படி நாம் எவ்வாறு வாழவேண்டும்? மத் 5:38-48ஐயும், ரோமர் 12:20,21ஐயும் ஒப்பிடுங்கள்.**

‘நியாயப்பிரமாணம் தீர்க்கதரிசனவாக்கியங்கள்’ அனைத்தையும் அதாவது, பழைய ஏற்பாட்டின் பரிசுத்த வாக்கியங்கள் அனைத்தையும் ஓர் எளிய நியதியில் இயேசு அடக்கிவிடுகிறார். அதைத்தான் பொன் விதி என்கிறோம். அது என்ன? ‘மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.’ மத் 7:12.

என்ன விலையானாலும், இங்கு இயேசு சொல்வதுபோல நடந்துகொள்வதற்கு இப்போதே என்னென்ன வழிகளில் நாம் முயலலாம்?

## நல்ல சமாரியன்

**கேள்வி: இயேசுவிடம் கேள்விகேட்ட நியாயசாஸ்திரி, தேவனுக்குப் பிரியமாக வாழ்வது குறித்த பழைய ஏற்பாட்டு கற்பனைகளின் சுருக்கத்தைச் சொல்லுகிறான். லூக் 10:25-27. இந்த இரண்டு கற்பனைகளுக்குமுள்ள தொடர்பு என்ன?**

இயேசுவிடம் யாராவது கேள்விகேட்டால், அவர்கள் எதிர்பார்த்த பதிலை அவர் சொல்வது இல்லை. 'உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்று லேவி 19:18இல் உள்ளதை அந்த நியாயசாஸ்திரி சுட்டிக்காட்டுகிறான். எனவே, அன்றைய மதப்பற்றாளர்கள் பலர் 'பிறன்' நியதி குறித்து அதிகமாக விவாதித்துவந்தது தெரிகிறது.

மக்கள் தங்களுக்கு பிறனாயிருப்பவர்களை நேசித்தால் மட்டும் போதாது; ஒவ்வொருவருக்கும் நன்மைசெய்யவேண்டும் என்று இயேசு ஏற்கனவே சொல்லியிருந்தார்: 'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பரம பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.' மத் 5:44,45.

ஆனால், மதச்சட்டங்களை நன்கு அறிந்த ஒருவன் இயேசுவைச் சோதிக்கும்படி, 'எனக்குப் பிறன் யார்?' என்கிற கேள்வியை எழுப்புகிறான். லூக் 10:29. அப்போது நல்ல சமாரியன் சம்பவத்தை இயேசு சொன்னார். அந்தக் கேள்விக்கான இறுதிப் பதிலில் 'பிறன் யார்?' என்பதற்கான பதில் இல்லை. மாறாக, 'உன்னுடைய உதவி தேவைப்படுகிறவனுக்கு பிறனாக நடந்துகொள்' என்கிறார். லூக் 10:36,37.

**கேள்வி: சாலையோரமாக உதவிதேவைப்பட்ட நிலையில் கிடந்தவனைக் கண்ட மூன்று பேரின் தன்மைகளை இயேசு வித்தியாசப்படுத்திக் காட்டுகிறார். அதில் வெளிப்படுகிற முக்கிய உண்மை என்ன?**

தங்களை பக்திமான்கள்போலக் காண்பித்து, பிறர் வேதனையைக் கண்டு கொஞ்சமும் இரங்காமல் இருந்தவர்களைத்தான் இயேசு கடுமையாக விமர்சிக்கிறார்: 'நல்ல சமாரியன் சம்பவத்தில், மெய்ப்பக்தி எப்படிப்பட்டதென இயேசு எடுத்துக்காட்டுகிறார். அது முறைமைகளை, சட்டதிட்டங்களை, சடங்குகளைச் சார்ந்ததல்ல; மெய்யான நற்குணத்தோடு, பிறருக்கு மிகுந்த நன்மையை விளைவிக்கும்படி அன்புடன் செய்யப்படும் கிரியைகளைச் சார்ந்தது.' - *EGW, DA, p 497.* தம் சீடர்களுக்கு தேவன் கட்டளையிட்டிருப்பதை, உண்மையற்றவனாகக் கருதப்பட்ட ஒரு வெளிஜாதியான் நிறைவேற்றியதாக இயேசு சொல்கிறார்.

நித்திய ஜீவனைப் பெற என்ன செய்யவேண்டுமென இன்று நாம் இயேசுவிடம் கேட்டால், உதவிதேவைப்படுகிற ஒருவருக்கு நல்ல பிறனாக நடந்துகொள் என்றுதான் இயேசு சொல்லுவார்.

# ஐசுவரியவானும் லாசருவும்

ஐசுவரியவான்-லாசருவின் உவமைமூலம் செல்வந்தர்கள் மற்றும் தரித்திரரின் வாழ்க்கையை இயேசு ஒப்பிடுகிறார். லூக் 16: 19-31. சமுதாய நற்பணி அமைப்புகள், ஆதரவு இல்லங்கள் இல்லாததால், மாற்றுத்திறனாளிகளும் எளியவர்களும் பிறதரித்திரரும் ஐசுவரியவான்களுடைய வீட்டுவாசல்களில் பிச்சைகேட்பது வழக்கமாக இருந்தது. அப்படிப்பட்டவர்களின் வேதனையைப் போக்குவதற்கு செல்வந்தர்கள் தங்கள் ஐசுவரியங்களால் முயன்றிருக்கவேண்டும். ஆனால் இந்தச் சம்பவத்தில் ஐசுவரியவான், 'சுயநலக்காரனாக, உதவிதேவைப்பட்ட நிலையிலிருந்த தன் சகோதரனைக் கண்டுகொள்ளவில்லை.' - *EGW, DA, p 261.* உயிரோடிருந்தபோது, அவர்களுடைய சூழ்நிலைகளில் மாற்றமில்லை. ஆனால் மரித்தபிறகு, தேவனுடைய நியாயத்தீர்ப்பின்படி அவர்களுடைய சூழ்நிலைகள் தலைகீழாக மாறுகின்றன.

**கேள்வி: லூக்கா 16:19-31உடன் லூக்கா 12:13-21ஐ ஒப்பிடுங்கள். இந்த இரு சம்பவங்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகள் என்ன? வேற்றுமைகள் என்ன? இந்தச் சம்பவங்கள் நமக்குக் கற்றுக்கொடுப்பது என்ன?**

தவறானமுறையில் அவன் ஐசுவரியவனாக மாறினதாகச் சொல்லப்படவில்லை. இருவரும் கடினமாக உழைத்தார்கள்; சிக்கனமாகச் சேர்த்தார்கள்; தேவஆசீர்வாதத்தைப் பெற்றார்கள். ஆனால் வாழ்க்கை, தேவன், பணம் போன்றவற்றில் அவர்களுடைய மனநிலைதான் மாறியிருந்தது; அதுதான் அவர்களுடைய நித்திய வாழ்வையும் தீர்மானித்தது.

இயேசுவின் காலத்தில் பிரபலமாயிருந்த ஓர் உவமைதான் இந்தச் சம்பவம். இந்த வாழ்க்கையில் நாம் செய்யும் தீர்மானம், அடுத்த வாழ்க்கையில் பிரதிபலிப்பதை எடுத்துக்காட்டுகிறது. யாராவது நம்மிடம் உதவிகேட்டு வரும்போது, நாம் என்னசெய்கிறோம் என்பது நம் தெரிவுகளையும் முன்னுரிமைகளையும் காட்டிவிடுகிறது. வேதனையிலிருந்த ஐசுவரியவானிடம் 'ஆபிரகாம்' சொன்னதுபோல, நாம் சரியான தெரிவுகளைச் செய்வதற்கு ஏராளமான வழிகளை வேதாகமம் காட்டுகிறது. 'மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும்.' லூக் 16:29.

ஐசுவரியத்தைத் தேடவும் சேர்க்கவும் பெறவும் தூண்டப்படுகிறவர், தேவனுடைய ராஜ்யத்தையும் பிறமனிதர்களையும் விட்டுவிலகி, சுயத்தை முக்கியப்படுத்தி, சுயத்தைச் சார்ந்திருக்க வழிநடத்தப்படுகிறார். முதலாவது தம்முடைய ராஜ்யத்தைத் தேடவும், நாம் பெற்றிருக்கும் ஆசீர்வாதங்களை நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களிடம் குறிப்பாக எளியவர்களிடம் பகிர்ந்துகொள்ளவும் இயேசு நம்மை அழைக்கிறார்.

உங்களுடைய பொருளாதார நிலை எப்படியும் இருக்கட்டும்; வாழ்க்கையில் எது முக்கியமோ அதை நீங்கள் தேடாதபடிக்கு, பணமோ பணஆசையோ உங்களைத் தடுத்துவிடாமல் நீங்கள் எவ்வாறு கவனமாக இருக்கலாம்?

## ‘மிகவும் சிறியராகிய இவர்களில்’

இயேசுவிடம் ஒரு கேள்வியைக் கேட்டு, எதிர்பார்த்த பதில் கிடைக்காத இன்னொரு சம்பவத்தை மத்தேயு 24,25இலுள்ள பிரசங்கத்தில் பார்க்கலாம். எருசலேம் தேவாலயத்தின் அழிவுகுறித்தும், இயேசுவின் வருகைகுறித்தும் இயேசுவிடம் சீடர்கள் கேட்கிறார்கள். மத் 24:1-3. விரிவாக அதற்குப் பதிலளிக்கும்போதுதான் பசியாயிருப்பவர்களுக்குப் போஜனங்கொடுப்பது, தாகமாயிருப்பவர்களுக்கு தண்ணீர்தருவது, அந்நியர்களைச் சேர்த்துக்கொள்வது, வஸ்திரமில்லாதோருக்கு வஸ்திரம் கொடுப்பது, நோயாளிகளைக் கவனிப்பது, சிறையிலிருப்போரைச் சந்திப்பதுபற்றி இயேசு குறிப்பிடுகிறார். ‘என் சகோதர சகோதரிகளாகிய மிகவும் சிறியராகிய இவர்களில் யாருக்கு நீங்கள் உதவினீர்களோ, உதவமறுத்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்’ என்று குறிப்பிட்டார். மத் 25:40,45.

கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களை, இறுதிநியாயத்தீர்ப்புடன் சம்பந்தப்படுத்திப் பேசுகிறார். மத் 24இல், சீடர்களின் கேள்விகளுக்கு பெரும்பாலும் நேரடி பதில்களைச் சொல்கிறார்; எருசலேமின் அழிவு மற்றும் தம்முடைய வருகைக்கான அடையாளங்களையும் எச்சரிப்புகளையும் சுட்டிக்காட்டுகிறார். ‘விழித்திருந்து,’ வருகையின் வாக்குறுதியை மனதில்வைத்து , நல்லதொரு வாழ்க்கை வாழுமாறு சொல்கிறார். புத்தியுள்ள-புத்தியற்ற கன்னிகைகளின் உவமையானது எதிர்பாராமல் அல்லது தாமதமாக இருக்கும் வருகைக்கு ஆயத்தப்படச் சொல்கிறது. மூன்று ஊழியக்காரர் குறித்த உவமையானது, காத்திருக்கும் வேளையில் பயனுள்ள, நன்மையான வாழ்க்கை வாழச்சொல்லுகிறது. செம்மறியாடுகள்-வெள்ளாடுகள் குறித்த உவமையானது தேவபிள்ளைகளின் கடமைகளைச் சுட்டிக்காட்டுகிறது. மத்தேயு 25.

**கேள்வி: மத் 25:31-46இல் இயேசு சொல்வது என்ன? இவ்வாறு செய்வது கிரியைகளால் இரட்சிப்பைப்பெற முயல்வதா? இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்தைப் பெற்றிருக்கவேண்டியதை இந்த வார்த்தைகள் எவ்வாறு வலியுறுத்துகின்றன?**

---

பிறருக்கு ஊழியம்செய்யும்போது, இயேசுவுக்கே செய்கிறோம். நம் உறவுகளிலும் மனநிலைகளிலும் இவ்வசனங்கள் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். போஜனத்திற்கு இயேசுவை அழைப்பதும், மருத்துவமனை அல்லது சிறைச்சாலையில் இயேசுவைச் சந்திப்பதும் எத்தகைய அனுபவம்! இதே ஊழியத்தை பிறருக்கு நாம் செய்தால், இயேசுவுக்கே செய்கிறோம் என்று அவர்தாமே சொன்னார். இவ்வாறு அவருக்கு ஊழியம்செய்ய அருமையான ஒரு வாய்ப்பை அவர் வழங்கியிருக்கிறார்!

இந்த வசனங்களில் இயேசு சொல்வதை ஜெபத்துடன் வாசியுங்கள். பசியுள்ளவர்கள், வஸ்திரமில்லாதவர்கள், சிறையிலிருப்பவர்கள் போன்றோரை தம்முடன் ஒப்பிட்டு இயேசு பேசுவதைப் புரிந்துகொள்ள முடிகிறதா? நம்முடைய வாழ்க்கையில் இது எவ்வளவு பெரிய கடமையைச் சுமத்துகிறது?

## வெள்ளி ஆகஸ்ட் 23

## மேலும் படிக்க:

'பிரிவினைச்சுவரையும், சுயநலஅன்பையும், தேசத்தின்பேரில் பிளவுண்டாக்கும் தப்பெண்ணத்தையும் கிறிஸ்து தகர்த்து, மனிதகுடும்பம் முழுவதிலும் அன்பு காட்டச் சொல்கிறார். சுயநலம் உருவாக்கும் குறுகிய வட்டத்திற்குள்ளிலிருந்து மனிதர்களை அவர் தூக்குகிறார்; சமுதாயத்தில் மனிதர்களே உருவாக்கியிருக்கும் பிரிவினைகளையும் தேசஎல்லைகளையும் அவர் ஒழிக்கிறார். உறவினர்கள்–அந்நியர்கள், நண்பர்கள்–எதிரிகள் என்று அவர் பிரித்துப்பார்ப்பதில்லை. தேவையில் இருக்கும் ஒவ்வோர் ஆத்துமாவையும் நமக்குப் பிறனாகவும், உலகத்தை நம் களமாகவும் பார்க்கும்படி அவர் போதிக்கிறார்.'— *EGW, MB, p 42.*

'பொன்விதிகளின் தரம்தான் கிறிஸ்தவமார்க்கத்தின் தரமாகும்; இதற்குக் குறைவான எதுவும் வஞ்சகமே. கிறிஸ்து தம்மையே கொடுக்குமளவிற்கு உயர்வாக மதித்த மனிதர்களை இழிவாகக்கருத வழிநடத்தும் ஒரு மதமானது, மனிதர்களின் தேவைகளையும் வேதனைகளையும் உரிமைகளையும் அலட்சியப்படுத்த வழிநடத்தும் மதமானது போலி மதமாகும். தரித்திரர், உபத்திரவப்படுவர்கள், பாவிகள் ஆகியோரின் குரல்களை நாம் அலட்சியப்படுத்தும்போது, கிறிஸ்துவின் துரோகிகளென நிரூபிக்கிறோம். தங்களை கிறிஸ்தவர்களெனச் சொல்லியும், அவருடைய குணத்தை வெளிப்படுத்த மறுப்பவர்களால்தான், உலகில் கிறிஸ்தவமதம் வல்லமையற்றதாக இருக்கிறது.' – *p 136,137.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *இந்த வாரப்பாடத்தில் உங்களுக்குப் பிடித்த வேதப்பகுதிகள் எவை? ஏன்?*
2. *'மனிதர்களின் தேவைகளையும், வேதனைகளையும் அல்லது உரிமைகளையும் அலட்சியப்படுத்த வழிநடத்தும் ஒரு மதம் போலி மதம்' என்று எலன் ஒய்ட் சொல்கிறார். 'சத்தியம்' நம்மிடம் இருப்பதால், வேறு எதுவும் தேவையில்லையென நம்மையே ஏமாற்றாமல், எவ்வாறு தப்பலாம்?*
3. *'சத்தியத்தைப்' பெற்றிருப்பதில் வேறு என்னவெல்லாம் சம்பந்தப்பட்டிருப்பதாக வியாழக்கிழமைப் பாட வசனங்கள் தெரிவிக்கின்றன?*

**பாடச்சுருக்கம்: தேவனுடைய ராஜ்யத்தின் முகவர்களும் குடிமக்களும் எப்படிப்பட்டவர்களாக வாழவேண்டுமென்று இயேசு தம் போதனைகளில் சொன்னார். பழைய ஏற்பாட்டு வசனங்களை அடிப்படையாக வைத்து, தரித்திரர் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள்மேல் அக்கறைகாட்டுவதின் விசாலமான அர்த்தத்தைக் கற்பித்தார். தம்மைப் பின்பற்றுகிறவர்கள் தம்முடைய வருகைக்காகக் காத்திருக்கிற வேளையில் மனதுருக்கமும் இரக்கமும் உள்ளவர்களாக வாழவேண்டுமென வலியுறுத்தினார்.**